# தமிழ்நாடு BSNL மகளிர் ஒருங்கிணைப்புக் குழு

## மாநிலக் குழு கூட்ட முடிவுகள்

அன்பார்ந்த தோழர்களே,

BSNL WWCC மாநிலக் குழு கூட்டம் 9.7.2014 அன்று, தென்காசியில் தோழியர். N.சரோஜாதேவி தலைமையில் நடைபெற்றது. உழைப்பாளி வர்க்கத்தின் ஒப்பற்ற தலைவர் தோழர். ஆர். உமாநாத், தபால்-தந்தி இயக்கத்தின் மூத்த தலைவர் தோழர். டி.எஸ். ராஜன், கே.ஜி.போஸ் அணித் தலைவர்களில் ஒருவரான தோழர். வி. புதியவன், இக்காலகட்டத்தில் நடந்த பாலியல் வன்முறைகளில் பலியான பெண்கள் மற்றும் மவுலிவாக்கம் கட்டிட விபத்தில் பலியான கட்டுமான தொழிலாளர்கள் ஆகியோரின் மறைவுக்கு தோழியர். பெர்லின் முன்மொழிந்த தீர்மானத்தின் பின் அஞ்சலி செலுத்தப் பட்டது. BSNL ஊழியர் சங்கத்தின் மாநில உதவிச் செயலாளர் தோழர்.சி. பழனிச்சாமி கூட்டத்தைத் துவக்கி வைத்து எழுச்சி மிகுந்த உரையாற்றினார்.

தொடர்ந்து, மாநில அமைப்புச் செயலர் தோழர். கோபாலன், திருநெல்வேலி மாவட்டத் தலைவர் தோழர். சூசை மரிய அந்தோணி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். மாநிலக்குழு கூட்ட செலவுகளுக்காக தோழர். சூசை மரிய அந்தோணியும், தோழர். உக்கிரசேனனும் நன்கொடை வழங்கினர். அவர்களுக்கு நமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம் !

மாநில கன்வீனர் தோழியர். ப. இந்திரா, வேலையறிக்கையை சமர்ப்பித்தார். தோழியர். பிரேமா, சங்க மாவட்ட மாநில மாநாடுகள், ஜூலை தர்ணா போராட்டம், சொஸைட்டி தேர்தல் உள்ளிட்டவற்றை விளக்கிப் பேசினார். அதன் பின் மாநிலக் குழு உறுப்பினர்கள் விவாதத்தில் பங்கேற்றனர். இவற்றின் விவரங்கள் :

இக்கால கட்டத்தில் விருதுநகர், கடலூர், பாண்டிச்சேரி, ஈரோடு ஆகிய மாவட்டங்களில் சிறப்புக் கூட்டங்கள் மூலம் மாவட்டக் குழுக்கள் உருவாக்கப் பட்டுள்ளன.

<u>மாவட்டக் குழு உள்ள மாவட்டங்கள்</u> : குன்னூர், கோவை, ஈரோடு, கடலூர், பாண்டிச்சேரி, தஞ்சை, திருச்சி, விருதுநகர், திருநெல்வேலி, தூத்துக்குடி, நாகர்கோவில்.

2013, 2014 ஆண்டுகளில் பெரும்பான்மையான மாவட்டங்களில் சர்வதேசப் பெண்கள் தின நிகழ்ச்சிகள் பல்வேறு வடிவங்களில் சிறப்பாக நடத்தப் பட்டுள்ளன. ஏற்பாடுகளைச் செய்த அனைத்து தோழியர், தோழர்களைப் பாராட்டுகிறோம் !

மாநில அறைகூவலாக, மூத்த பெண் ஊழியர்களுக்கு சிறப்பு மருத்துவ விடுப்பு உட்பட கோரிக்கைகளை வலியுறுத்தி, 23.7.2013 அன்று வாயிற்கூட்டங்கள், ஆர்ப்பாட்டங்கள் பல மாவட்டங்களில் நடைபெற்றுள்ளன.

1.10.2013, 2.10.2013 தேதிகளில் நடைபெற்ற தமிழ்நாடு தொலைதொடர்பு ஒப்பந்தத் தொழிலாளர் சங்க மாநில மாநாட்டில் பெண்கள் அதிகமாகப் பங்கேற்றதோடு, விவாதத்திலும், சிறப்பாகப் பேசினர். அவர்களுக்கும், மாநிலச் சங்க நிர்வாகிகளாகத் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ள தோழியர். உஷா (பாண்டிச்சேரி), வளர்மதி (ஈரோடு) ஆகியோருக்கும் மாநிலக் குழு வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறது.

14.12.2013 அன்று கோவையில் பெண் ஊழியர்களுக்கான வகுப்பில் பல மாவட்டங்களிலிருந்து 60 பெண்கள் கலந்து கொண்டனர். "உழைக்கும் பெண்கள் முன்னுள்ள சவால்கள்" என்ற தலைப்பில் தோழர்.எம். கிரிஜாவும், "பொதுத் துறைகள் முன்னுள்ள சவால்கள்" என்ற தலைப்பில் தோழர். S. செல்லப்பாவும் மிக சிறப்பாக உரையாற்றினர். வகுப்பு மிக பயனுள்ளதாக இருந்தது எனத் தெரிவித்த தோழியர் விவாதத்திலும் உற்சாகமாகக் கலந்து கொண்டனர்.

பாண்டிச்சேரியில் பாலியல் துன்புறுத்தலுக்கு ஆளான பெண் ஊழியரின் பிரச்னைக்கு, மாவட்டக் குழுவும், சங்கத் தோழர்களும் போராடி, சம்பந்தப் பட்ட அதிகாரிக்கு பதவி கீழ்நிலை மாற்றம் செய்யப் பட்டுள்ளது.

2014 ஏப்ரல் மாதம் நடைபெற்ற சென்னை சொஸைட்டி தேர்தலில் வெற்றி பெற்ற , தோழியர். விஜயகுமாரிக்கும், தக்கலை (கன்னியாகுமாரி) சொஸைட்டி தேர்தலில் ஏகமனதாக தேர்ந்தெடுக்கப் பட்ட

தோழியர். பெர்லின், மகேஸ்வரி, துணைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பட்ட தோழியர். R.பாப்பாத்தி ஆகியோருக்கு மாநிலக் குழு பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறது.

நாகர்கோவில் தோழியர் G. களஞ்சியம், திருநெல்வேலி தோழியர்.V. சீதாலஷ்மி, கோவை தோழியர்.K. பங்கஜம், குன்னூர் தோழியர் P. தனம்மாள், கடலூர் தோழியர் N. சரோஜாதேவி ஆகியோர் விவாத்தில் கலந்து கொண்டனர். விவாதத்துக்குப் பிறகு, பின்வரும் முடிவுகள் எடுக்கப் பட்டன.

## உடனடி கடமைகள்

1) 11.7.14 - தர்ணாவில் பெண் ஊழியர்களைப் பங்கேற்பதை உத்தரவாதம் செய்ய வேண்டும்.
( பேச்சு வார்த்தை வெற்றியினால் போராட்டம் ஒத்தி வைக்கப் பட்டு விட்டது. )

2) ஜூலை 23 முதல் ஆகஸ்ட் 22 வரை பெண் ஊழியர் கோரிக்கைகளுக்கான கையெழுத்து இயக்கம். நகல் மாவட்டங்களுக்கு அனுப்பப்படும். ஆண், பெண் இருபாலாரிடமும் கையெழுத்துப் பெற வேண்டும்.

3) அனைத்து மாவட்டங்களிலும் அலுவலகங்களில் பெண்களுக்கான தனி கழிப்பறை உள்ளதை உத்தரவாதம் செய்ய வேண்டும்.

4) சங்க மாவட்ட மாநாடுகள் பெரும்பாலும் குடும்ப விழாக்களாக நடத்தத் திட்டமிடப் பட்டுள்ளன. சங்க மாநில மாநாடு அக்டோபர் 10, 11, 12 தேதிகளில் நடைபெறவுள்ளது. பெண்களை அதிகம் பங்கேற்கச் செய்ய வேண்டும்

5) அனைத்துப் பகுதி உழைக்கும் பெண்களுக்கான மாவட்ட மாநாடுகளும், நடந்து கொண்டிருக்கின்றன. மாநில மாநாடு ஆகஸ்ட் 12-13 தஞ்சாவூர். மாதர்சங்க மாநாடுகளும் நடந்து கொண்டிருக்கின்றன. அவற்றிற்கும் ஒத்துழைப்பு அளிக்க வேண்டும்.

## மாநிலக் குழு தீர்மானங்கள்

- மத்திய அரசு, பொதுத் துறை உள்ளிட்டவற்றில் பணியாற்றும் அனைத்துப் பெண் ஊழியர்களுக்கும் 45 வயதுக்கு மேல் சிறப்பு மருத்துவ விடுப்பு வழங்கப் பட வேண்டும்.

- பெண்கள் பணி புரியும் அனைத்துப் பணியிடங்களிலும் தனிக் கழிப்பறை உத்தரவாதம் செய்யப் பட வேண்டும்.

- ஒப்பந்த பெண் தொழிலாளர்களுக்கு குறைந்த பட்ச ஊதியம், 180 நாட்கள் மகப் பேறு விடுப்பு, குழந்தைப் பராமரிப்பு விடுப்பு வழங்கப் பட வேண்டும்.

- பெண்கள் குறித்த ஒரு புதிய கொள்கை மத்திய அரசால் வகுக்கப் பட வேண்டும். பெண்களுக்கு சமூகத்தில் மதிப்பும், கௌரவமும், கண்ணியமும், பாதுகாப்பும் அளிப்பதை அது உறுதி செய்ய வேண்டும். குறிப்பாக அத்தகைய பொறுப்புணர்ச்சியோடு ஊடகங்களில் பெண்கள் சித்தரிக்கப்பட வேண்டும்.

- பெட்ரோல் டீசல் விலை நிர்ணய உரிமை தனியார் நிறுவனங்களிடமிருந்து மீண்டும் மத்திய அரசுக்கு மாற்றப் படுவதோடு, விலையில் பாதியாக உள்ள வரிகளை ரத்து செய்ய வேண்டும்.

- ரயில் கட்டணம், சரக்குக் கட்டண உயர்வை வாபஸ் பெற வேண்டும். காஸ், கெரசின் விலை உயர்வு முடிவைக் கைவிட வேண்டும்.

தோழியர் தனம்மாள் நன்றியுரையோடு கூட்டம் நிறைவுற்றது. முடிவுகளை நிறைவேற்ற அனைவரும் ஒத்துழைக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

**P.இந்திரா**
**மாநில கன்வீனர்.**
**15-07-2014**